மூன்று ஆண்டுத் திட்டத்தில் ஏற்கனவே இருந்ததைவிட அதிக மான பாடங்களைப் படிக்க வழி செய்யலாமா என்பதுபற்றி பார் கவுன்சில் யோசித்து வருகிறது.

2. நடைமுறைக் கேள்வி
உரிய இருக்கையிலிருந்து உரையாற்றுதல்

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அங்கத்தினர்கள் அவரவர் இடத்தில் இருந்து கொண்டுதான் கேள்விகள் கேட்கவேண்டும், பேச வேண்டுமென்று தாங்கள் தீர்ப்புச் சொல்லியிருக்கிறீர்கள். அமைச்சர்கள் இடம் மாறி உட்கார்ந்து பதில் சொல்லலாமா ?

(There was a pause.)

THIRU K VINAYAKAM : Does the Chair decline to give a ruling? A pertinent point has been raised. Let us know the view of the Chair. If the Chair is lenient to the Government, we do not mind. But we must know the reaction. When an ordinary member like me changed seat, you pulled me up and asked me to go to my seat. I obeyed implicitly. Are you going to adopt two standards of judgment or do you want to be lenient to the Government? This is an academic discussion. But let us know the view of the Chair so that it may go into the proceedings and be useful for future generations.

MR. SPEAKER : I will give the ruling.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் புதியவர்களாக இருக்கும்போது அவர்கள் இடத்திலிருந்து எழுந்து கையை உயர்த்திக் காட்டுகிற நேரத்தில் சபாநாயகர் அவர்கள் யார் யார் என்று பிரித்து வைத்திருக்கிற இடத்தை வைத்துக் கொண்டு பெயரைச் சொல்ல வேண்டும். அமைச்சர்களைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட குழப்பம் சபாநாயகருக்கு ஏற்படாது. ஆகவே, இந்த இடம் மாறுதலில் தவறுதல் இல்லையென்று கருதுகிறேன்.

THIRU K. VINAYAKAM : That is the view of the Minister for Public Works. He wants to escape from the nasty situation that has been created. That is an explanation and we cannot take it as an answer to the point. What is the ruling of the Chair? We want to know it so that it may be useful for the future members of this House.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : உறுப்பினர்கள் யாராக இருந் தாலும் பேசுகிறபோது அவர்களுடைய இடத்திலிருந்துதான் பேச வேண்டுமென்று 64-வது விதி கூறுகிறது.

1. வினாக்கள்-விடைகள்--தொடர்ச்சி

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் இருப்பவர்களுக்கு மட்டுந்தான் மாலை நேரக் கல்லூரிகள் இருக் கின்றன. ஏனைய மாவட்டங்களில் இருப்பவர்களும் இவ்வாறு மாலை நேர வகுப்புகளில் சட்டம் படிக்க அரசு வசதிகளைச் செய் யுமா?